14

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1571/15 - 2008 ඔක්තෝබර් 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2008.10.16

1571/15 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 21/78பீ/V.

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 24 அ என்னும் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
2008, ஒகத்து 25.

கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 2008 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, கொழும்புப் பல்கலைக்கழக கமத்தொழில் தொழில்நுட்பவியல் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவகக் கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2008, ஒகத்து 25 ஆந் திகதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

2. இக்கட்டளைச் சட்டமானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும் 2008, ஒற்றோபர் 10 ஆந் திகதி 1570/34 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளை மூலம் தாபிக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறியீடு செய்யப்படும்) இலங்கை பல்கலைக்கழக கமத்தொழில் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவகத்திற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

3. இந்நிறுவகம் (இதனகத்துப்பின்னர் "பல்கலைக்கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்திருத்தல் வேண்டும்.

4. நிறுவகமானது சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழக ஆணைக்குழுவின் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) மாணவர்களை அனுமதிப்பதற்கு ;

(ஆ) கமத்தொழில்- தொழில் நுட்பவியல், கமம்சார், வணிகம் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களின் பரப்பில் பயிற்சிநெறிகளை நடாத்துதல் ;

(இ) நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின் மீது, ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான அத்தகைய கமத்தொழில், நுட்பவியல், கமம்சார் வணிகம் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களின் கிளைகளில் போதனைக்கும் பயிற்சிக்கும் ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உசாத்துணைக்கும் ஏற்பாடு செய்வதற்கு ;

(ஈ) கமத்தொழில் - தொழில்நுட்பவியல், கமம்சார் - வணிகம் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களில் தேர்ச்சி பெற்றுள்ள ஆட்களை ஆராய்ந்தறியும் நோக்கத்திற்காக, பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் பரீட்சைகளை நடாத்துவதற்கும் அத்தகைய பரீட்சைகளில் சித்தியடைந்தும் துணைவிதிகளில் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வேறு நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தியும், பல்கலைக்கழகத்தின் பட்டங்களினதும், டிப்ளோமாக்களினதும் சான்றிதழ்களினதும் ஏனைய கல்விசார் சாதனைகளினதும் அளிப்புக்கும் தகுதியுடைய ஆட்களைப் பல்கலைக்கழகத்திற்கு விதப்புரை செய்வதற்கும் ;

(உ) பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடனும், அவசியமானவிடத்து ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடனும், கமத்தொழில், தொழில்நுட்பவியல், கமம்சார் - வணிகம் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களிலும் அத்துடன் தொடர்புபட்ட தொழில்நுட்பவியல்களிலும் அளிக்கப்படவுள்ள பட்டங்களையும் டிப்ளோமாக்களையும் சான்றிதழ்களையும் வேறு கல்விசார் சாதனைகளையும் தீர்மானிப்பதற்கும் ;

(ஊ) நிறுவகத்தின் குறிக்கோள்களையொத்த அல்லது பொருளளவில் அக்குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடைய இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுடன் அல்லது நிறுவகங்களுடன் ஆசிரியர்களையும், மாணவர்களையும் அத்துடன் கல்விமான்களையும் பரிமாறுதல் மூலம் அல்லது வேறு வகையில் ஒத்துழைப்பதற்கும் ;

(எ) நிறுவகத்திற்கு அனுமதிகோரும் ஆட்கள் சித்தியடைந்த பரீட்சைகளையும் பயிற்சி அல்லது கற்கைக் காலப்பகுதிகளையும் பல்கலைக்கழகங்களில் மேற்கொண்ட கற்கைகளையும் பல்கலைக்கழக மட்டத்தில் கற்கும் இடங்களையும் துணைவிதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான பரீட்சைகளுக்கும் நிறுவகத்தில் பயிற்சி அல்லது கற்கைக் காலப்பகுதிகளுக்கும் அல்லது அதன் அத்தகைய பாகத்திற்கும் சமமாக இருப்பதாக அங்கீகரிக்குமாறு பல்கலைக்கழகத்தின் முதவைக்கு விதப்புரை செய்வதற்கும் அத்துடன் அவசியமேற்படுமிடத்து, விதித்துரைக்கப்பட்ட துணைவிதிக்கிணங்க அத்தகைய அங்கீகரிப்பைக் கைமீட்பதற்கும் ;

(ஏ) பல்கலைக்கழகத்தின் ஒருங்கிசைவுடனும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் கல்விசார் கூட்டவைகளை உருவாக்க தீர்மானிப்பதற்கும் ;

(ஐ) நிறுவகத்தின் நோக்கங்களுக்கு தேவைப்படுகின்றவாறான அத்தகைய போதனையின், பயிற்சியின், ஆராய்ச்சியின், அபிவிருத்தியின் அல்லது உசாத்துணையின் நோக்கங்களுக்காக நூலகங்களையும் ஆய்வு கூடங்களையும் அத்துடன் வேறு கட்டிடங்களையும் பல்கலைக்கழக ஒருங்கிசைவுடன் நிறுவுவதற்கும் அவற்றுக்குப் பொருட்களைப் பெறுவதற்கும் பேணுவதற்கும் ;

(ஒ) நிறுவனத்தின் நோக்கத்திற்குத் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய கற்பித்தல், நிர்வாக மற்றும் வேறு பதவிகளை உருவாக்குதலை பல்கலைக்கழகத்திற்கு விதந்துரைப்பதற்கும் அத்துடன் அவற்றை ஒழிப்பதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ;

(ஓ) பல்கலைக்கழகத்துடனான கலந்தாலோசனையுடன், ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்களையும் புலமைப்பரிசில்களையும் புலமைப் பொருளுதவிகளையும் ஏழைக்கல்வி உதவிகளையும் பதக்கங்களையும் அத்துடன் வேறு பரிசுகளையும் அமைத்துருவாக்குவதற்கும் அளிப்பதற்கும் ;

(ஔ) நிறுவகத்திற்கு வெளியே கற்கைப் பயிற்சி நெறிகளை அல்லது அத்தகைய கற்கைப் பயிற்சி நெறிகளின் பாகங்களை அவற்றை ஏற்பாடு செய்யுமாறு தேவைப்படுத்தும் எவையேனும் துணைவிதிகளுக்கிணங்க நடத்துவதற்கு ஒழுங்குசெய்வதற்கும் ;

(க) அரசாங்கக் கொள்கைக்கும் கட்டணத்தில் கொடுப்பனவைத் தேவைப்படுத்தும் விதிக்கும் இணங்க கட்டணங்களைக் கோருவதற்கும் பெறுவதற்கும் ; அத்துடன்

(ங) நிறுவகத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கு மேற்பட்ட தத்துவங்களுக்கும் கடமைகளுக்கும் பணிகளுக்கும் இடைநேர் விளைவான அல்லது அவற்றின் விளைவாந்தன்மையினதான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்வதற்கும்,

தத்துவமுடையதாதல் வேண்டும்.

5. நிறுவகம் பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) முகாமைச் சபை (கட்டளைச் சட்டத்தில் இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ;

(ii) கல்விசார் கூட்டவை ;

(iii) கற்கைச் சபை அல்லது சபைகள் ;

(iv) கற்கைப் பகுதிகள் ;

(v) நிலையங்கள் ; அத்துடன்

(vi) ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு குழுமங்கள்.

6. நிறுவகம் பின்வரும் அலுவலர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) பணிப்பாளர் ;

(ii) பிரதிப் பணிப்பாளர் ;

(iii) எந்தப் பதவியை வகிக்கும் அலுவலர் இப்பந்தியின் நோக்கத்திற்காக அலுவலர் ஒருவராக இருக்கின்றாரோ அந்தப் பதவியொன்றாக இக்கட்டளைச் சட்டத்தால் வெளிப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் பதவியை வகிப்பவர்.

7. (1) நிறுவகத்தின் முதலாவது பணிப்பாளர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரின் விதப்புரையின் மீது பல்லைக்கழகத்தின் பேரவையால் (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நியமிக்கப்படுதல் வேண்டும். அதன் பின்னரான ஒவ்வொரு பணிப்பாளரும் நிறுவனத்தின் சபையால் விதந்துரைக்கப்பட்ட மூன்று ஆட்களைக் கொண்ட குழாமொன்றிலிருந்து பேரவையால் நியமிக்கப்படுதல் வேண்டும் ;

ஆயின், எவ்வாறாயினும் ஆளெவரும் தொடர்ச்சியாக இரண்டு தவணைகளுக்குமேல் பணிப்பாளராக நியமிக்கப்படுதலாகாது ;

ஆயின் மேலும், பணிப்பாளரின் நியமனத்திற்கு ஆணைக்குழுவின் முன்னதான அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் பணிப்பாளர், அதன் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி அல்லது (3) ஆம் உட்பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பதவியில் இருந்து அகற்றப்பட்டாலன்றி, அவரது நியமனத் திகதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அல்லது அவரது அறுபத்தைந்தாவது வயதைப்பூர்த்தி செய்யும்வரை, அல்லது அதாவது இவை இரண்டுள் எது முன்னராக நிகழ்கின்றதோ அதுவரை பதவி வகித்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர், அத்தகைய நோக்கத்திற்கென கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில் சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் இரண்டிற்குக் குறையாதோரால் நிறைவேற்றப்படும் கண்டனவாக்கொன்றின் மீது காட்டப்படும் காரணங்களுக்காக பேரவையால் பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் பணிப்பாளரைத் தவிர தங்களிடையேயிருந்து ஆளொருவரை அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்கெனத் தெரிவு செய்யலாம்.

(4) பதவி விலகிய அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்ட பணிப்பாளர் ஒருவர் பணிப்பாளராக அவரது நியமனத்திற்கு உடன் முன்னர் உயர் கல்வி நிறுவகமொன்றின் உறுப்பினரொருவராக இருந்திருப்பின், அத்தகைய உயர் கல்வி நிறுவகத்தில் அவரது நிலையான பதவிக்குத் திரும்பிச் செல்ல வேண்டும். ஆயின், அவர் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அவரது முன்னைய பதவியிலிருந்து ஓய்வுபெறும் வயதை அடையாதவராக இருத்தல் வேண்டும்.

(5) பணிப்பாளர், சுகயீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதுக்கள் காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராக இருக்குமிடத்து. துணைவேந்தர் உடனடியாக அப்பதவிக்குரிய கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்குப் பிரதிப் பணிப்பாளரை நியமித்தல் வேண்டும்.

(6) பணிப்பாளர் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படின், துணைவேந்தர் அத்தகைய வெற்றிடம் ஏற்பட்ட ஏழு நாட்களுக்குள் பணிப்பாளரின் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் பொருத்தமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரை பிரதிப்பணிப்பாளர் பணிப்பாளரின் கடமைகளைக் கவனித்தல் வேண்டும்.

8. (1) பணிப்பாளர் நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் பிரதான கல்விசார் அலுவலராகவும் இருத்தல் வேண்டும். இவர் நிறுவகத்தின் சபையினதும் நிறுவகத்தின் கல்விசார் கூட்டவையினதும் மற்றும் கற்கை சபைகளினதும் பதவிவழி உறுப்பினரொருவராதல் வேண்டும். இவர் நிறுவகத்தின் வேறெந்த அதிகார சபையினதும் அல்லது குழுமத்தினதும் கூட்டத்தில் சமுகமாயிருப்பதற்கும் அதில் உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும். ஆனால் அவர் அத்தகைய வேறு அதிகார சபையின் அல்லது குழுமத்தின் உறுப்பினரொருவராக இருந்தாலன்றி அத்தகைய கூட்டம் எதிலும் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(2) சபையால் அதன் சார்பில் காலத்துக்குக்காலம் சட்டமுறையாகத் தமக்கு வழங்கக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க, சட்டத்தினதும் கட்டளைச் சட்டத்தினதும் அத்துடன் வேறு ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகள், அவை நிறுவகத்தைத் தொடர்புறுத்தும் அளவுக்கு, முறையாக அனுசரிக்கப்படுவதை உறுதிப்படுத்துவது பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும் என்பதுடன் அவர், அந்நோக்கத்திற்கு அவசியமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவற்றையும் பிரயோகிக்கலாம்.

(3) முகாமைச் சபையின் முடிபுகளுக்குப் பயனளிப்பது அல்லது பயனளிக்கச் செய்விப்பது பணிப்பாளரது கடமையாதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் நிறுவகத்தின் கணக்கீட்டு அலுவலராதல் வேண்டும்.

(5) பணிப்பாளர், பல்கலைக்கழகத்துணை வேந்தரின் பணிப்பின் கீழ் நிறுவகத்திற்குள் ஒழுக்காற்றுதலைப் பேணுதலுக்கு பொறுப்பாகவிருத்தல் வேண்டும். ஒழுக்காற்று தொடர்பிலான எவையேனும் துணைவிதிகள் இல்லாதவிடத்து, பல்கலைக்கழகத்தின் தோதான துணைவிதிகளும் வேறு விதிகளும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

9. (1) பிரதிப் பணிப்பாளர் சபையின் விதப்புரையின் மீது நிறுவனத்தின் இணைப்பேராசிரியர்களாகவும், பேராசிரியர்களாகவும் சிரேஷ்ட பேராசிரியர்களாகவுமுள்ள ஆட்களிடையேயிருந்து பேரவையால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும் ஆளெவரும் தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்படுதல் ஆகாது.

(2) பிரதிப் பணிப்பாளரின் நியமனத்திற்கான விதப்புரையானது (1) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டதையடுத்தும் நேர்முகப் பரீட்சையொன்றை நடத்திய பின்னர் தெரிவு செய்யப்பட்டதன் மீதும் செய்யப்படுதல் வேண்டும். நேர்முகப் பரீட்சை சபையின் அமைப்பு சபையால் தீர்மானிக்கப்பட்டவாறாதல் வேண்டும்.

(3) பிரதிப் பணிப்பாளர், அவர் முன்னரே பதவியை வரைதாக்கினாலன்றி அல்லது (4) ஆம் உப்பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி அவரது நியமனத் திகதியிலிருந்து கணிப்பிடப்பட்ட மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அல்லது அவர் அவரது அறுபத்தைந்தாவது வயதைப் பூர்த்தி செய்யும்வரை இவற்றுள் எது முன்னராக ஏற்படுகின்றதோ அதுவரைப் பதவி வகித்தல் வேண்டும்.

(4) பிரதிப் பணிப்பாளர், அத்தகைய நோக்கத்திற்கென கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில் சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் இரண்டிற்குக் குறையாதோரால் நிறைவேற்றப்படும் கண்டன வாக்கொன்றின் மீது, காட்டப்படும் காரணங்களுக்காக பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

(5) பிரதிப் பணிப்பாளரின் கடமைகளும் பணிகளும் சபையால் தீர்மானிக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்.

10. சபையானது நிறுவகத்தின் கல்விசார் மற்றும் நிறைவேற்றுத்துறைக் குழுமமாயிருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(1) ஐந்து பதவி வழி உறுப்பினர்கள், அதாவது

(அ) பணிப்பாளர் ; இவர் தவிசாளராதல் வேண்டும்.

(ஆ) பிரதிப் பணிப்பாளர் ;

(இ) உயர்கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பானஅமைச்சரின் அமைச்சுச் செயலாளர், அல்லது உயல் கல்வி என்னும் விடயம் வேறு எந்த அமைச்சுக்கும் குறித்தொதுக்கப்படலாமோ அந்த அமைச்சின் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(ஈ) கமத்தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(உ) பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் பீடத் தலைவர்.

(2) வேறு ஆறு உறுப்பினர்கள், அதாவது :-

(அ) கமத்தொழில் நுட்பவியலையும் கமம்சார் வணிகக் கைத்தொழிலையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் ;

(ஆ) பேரவையால் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் ;

(இ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ; அத்துடன்

(ஈ) கல்விசார் கூட்டவையால் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து நியமிக்கப்பட்ட ஒரு உறுப்பினர்.

11. (1) சபையின் பணிப்பாளர் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்தில் பணிப்பாளர் சமுகமாயிராதவிடத்து பிரதிப் பணிப்பாளர் தலைமை தாங்குதல் வேண்டும். பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர் ஆகிய இருவரும் ஏதேனும் கூட்டத்தில் சமுகமாயிராதவிடத்து, உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கென சமுகமாயிருக்கும் உறுப்பினர்களிடையேயிருந்து வேறு எவரேனும் உறுப்பினரைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(2) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அவர் பதவியை முன்னரே வறிதாக்கினாலன்றி அவரது பெயர்குறித்து நியமனத் திகதியிலிருந்து அல்லது நியமனத் திகதியிலிருந்து மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு உறுப்பினர் ஒருவராகப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி மீளவும் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு மீளவும் தெரிவு செய்யப்படுவதற்கு அல்லது மீளவும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும், பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் அவரது பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் அவரது பதவியை வறிதாக்குவாராயின், அவரது பின்னுறுபவர், அவரது பதவியை முன்னரே வறிதாக்கினாலன்றி, அவரது முன்னுறுபவரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும்.

ஆயின் மேலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் எந்த அந்தஸ்தின் பயனைக்கொண்டு சபையின் உறுப்பினரொருவராக இருக்கின்றாரோ அந்த அந்தஸ்தை அவர் வகிக்கின்றவரை பதவி வகித்தல் வேண்டும்.

(3) சபையின் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் விடயத்திற்கேற்ப ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அல்லது துணைவேந்தருக்கு அத்துடன் அவரை நியமனம் செய்த நிறுவகத்தின் தவிசாளருக்கும், நிறுவகத்தின் பணிப்பாளருக்குப் பிரதியொன்றுடன் முகவரியிடப்பட்ட எழுத்திலான கடிதத்தின்மூலம் அவரது பதவியைத் துறக்கலாம்.

(4) லீவுக்கான அனுமதி இல்லாமல் தொடர்ச்சியாக சபையின் மூன்று கூட்டங்களுக்கு வருகைதரத் தவறுகின்ற சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவராக அவரது பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் விளைவாக ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நியமிக்கும் அதிகாரி இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க பொருத்தமான ஆளொருவரை நியமித்தல் வேண்டும்.

(5) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட சபையின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படவேண்டிய அத்தகைய வேதனம் அல்லது படிகள் செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலொன்றாதல் வேண்டும்.

(7) சபை, அவசியமானபொழுது கூடுதல் வேண்டும். ஆயின், எவ்வாறாயினும் அது ஒவ்வோராண்டும் எட்டுத் தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

(8) பணிப்பாளர், அவசியமானதென அவர் கருதுகின்றபோது அல்லது சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் இரண்டிற்குக் குறையாதோரால் எழுத்திலான வேண்டுகோள் ஒன்று அவருக்குக் கிடைக்கப்பெற்ற ஒரு வாரத்திற்குள் சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும். அத்தகைய வேண்டுகோள் அத்தகைய விசேட கூட்டத்தின் நோக்கத்தையும் குறித்துரைத்தல் வேண்டும்.

12. (1) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய சபை, பின்வரும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) நிறுவகத்தின் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அத்துடன் நிறுவகிப்பதற்கும் ;

(ஆ) சட்டத்தினதும் வேறு ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாட்டிற்கிணங்க நிறுவகம் தொடர்பான எல்லாக் கருமங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கும் தீர்மானிப்பதற்கும் ;

(இ) நிறுவகத்திற்கு அதன் பொது நிர்வாகத்திற்கெனவும் முகாமைத்துவத்திற்கெனவும் அத்துடன் வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்கெனவும் கிடைக்கச் செய்யப்பட்ட நிதியை நிறுவகிப்பதற்கும் கட்டுப்படுத்துவற்கும் ;

(ஈ) நிறுவகத்திற்குச் செய்யப்பட்ட அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனத்தின் மரணசாதனக் கையளிப்புகள், நன்கொடைகள், வேறு மானியக்கொடைகள் என்பவற்றை ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பெறுவதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் ;

(உ) நிறுவகத்தின் ஆண்டறிக்கைகளையும் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகளையும் ஐந்தொகையையும் மதிப்பீடு செய்வற்கும், அத்தகைய ஆண்டறிக்கையையும் அத்தகைய கணக்குகளையும், பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக்குழுவுக்கும் சமர்ப்பிப்பதற்கும் ;

(ஊ) எதிர்வரும் நிதியாண்டிற்கும் நிறுவகத்தின் மதிப்பீடுகளைத் தாயாரித்தலும் அல்லது தயாரிக்கச் செய்வித்தலும், அவை அங்கீகரிக்கப்பட்டதன் மீது அத்தயை மதிப்பீடுகளை பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக்குழுவிக்கும் சமர்ப்பிப்பதற்கும்

(எ) (i) கற்கை நெறிகளில் அளிக்கப்படவேண்டிய பட்டங்களையும், திப்ளோமாக்களையும் சான்றிதழ்களையும் வேறு கல்விசார் சிறப்புப்பட்டங்களையும் ;

(ii) பின்பற்றப்படவேண்டிய பாடநெறிகளையும் சித்தியடையவேண்டிய பரீட்சைகளையும் அத்தகைய சான்றிதழ்களுக்கும் வேறு கல்விசார் சிறப்புப் பட்டங்களுக்கும் தகைமைபெற விரும்பும் மாணவர்களால் திருப்திப்படுத்தப்படவேண்டிய வேறு நிபந்தனைகளையும் ;

கல்விசார் கூட்டவையுடனான கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகத்திற்கு விதப்புரை செய்வதற்கும் ;

(ஏ) எக்கருமங்கள் தொடர்பில் துணைவிதிகள் அல்லது விதிகளை ஆக்கப்பட அதிகாரமளிக்கப்படுகின்றதோ அத்துணைவிதிகள் அல்லது விதிகளை ஆக்குவதற்கும் ;

ஆயின் எவ்வாறாயினும் கற்கைநெறி மற்றும் பரீட்சைகள் தொடர்பிலான துணைவிதி அல்லது விதி எதுவும் கல்விசார கூட்டவையிடமிருந்தான அறிக்கைகளை கருத்திற்கெடுத்த பின்னர் அன்றி ஆக்கப்படுதலாகாது.

(ஐ) நிறுவகத்தின் பணியைக் கொண்டுநடாத்துவதற்குத் தேவைப்படும் கட்டிடங்களையும், வளவுகளையும் தளபாடங்களையும் உபகரணங்களையும் வேறு பொருட்களையும் ஏற்பாடு செய்வதற்கும் ;

(ஒ) ஆணைக்குழுவுக்கு பல்கலைக்கழகத்துடனான ஒருப்பாட்டுடன்

(i) நிறுவகத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படக்கூடியவாறான கற்பித்தல் மற்றும் நிர்வாகப் பதவிகளை உள்ளடக்கிய அத்தகைய பதவிகளை உருவாக்குதலையும் அத்தகைய பதவியை ஒழிப்பதனையும் அல்லது இடை நிறுத்துவதனையும் ;

(ii) நிறுவகத்திற்கு நியமிக்கப்படவேண்டிய ஆசிரியர்களிடமும் அலுவலர்களிடமும் வேறு ஊழியர்களிடமும் தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளையும் ;

(iii) நிறுவகத்தின் ஆசிரியர்களாகவும், பரீட்சகர்களாகவும், நியமிக்கப்படுவதற்கு தகுதியுடைய ஆட்களையும் விதப்புரைப்பதற்கும்.

(ஓ) நிறுவகத்தின் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களை இடை நிறுத்துவதற்கு, பதவிநீக்குவதற்கு அல்லது அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ;

(ஔ) பொருத்தமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினதான நிலையியற் குழுக்களை அல்லது வேளைக்கேற்ற குழுக்களை நியமிப்பதற்கும் அவற்றின் பணித்துறை நியதிகளைக் குறித்துரைப்பதற்கும், அத்தகைய குழுக்களின் அறிக்கைகளைப் பரீசீலனை செய்வதற்கும் திறவுபடுத்துதல்களுடனோ அல்லது திரிபுபடுத்துதல்கள் இன்றியோ அத்தகைய அறிக்கைகளை அங்கீகரிப்பதற்கும் அல்லது அத்தகைய அறிக்கைகளை நிராகரிப்பதற்கும் ;

(க) குறித்துரைக்கப்பட்ட பணியேற்புகளுக்குப் பொருத்தமான ஆட்களின் அல்லது பல்கலைக்கழகத்தின் ஏதேனும் பீடத்தின் சேவையாற்றுபவர்களான, நிறுவனத்துடன் இணைக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களின் சேவைகளைக் கோருவதற்கு ;

(ங) சட்டத்தின் 15 ஆம் பிரிவின் (VII) ஆம் பந்தியின் கீழ் ஆணைக்குழுவால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தவிர ஏனைய மாணவர்களைப் பாடநெறிகளுக்கு தெரிவு செய்வதற்கும் அனுமதிப்பதற்குமான கல்விசார் கூட்டவையுடனான கலந்தாலோசனையுடனும் பல்கலைக்கழகத்தினதும் ஆணைக்குழுவினதும் ஒருப்பாட்டுடனும் தீர்மானிப்பதற்கும் ;

(ச) பிரயோகிக்கப்படாத ஏதேனும் வருமானம் உட்பட நிறுவகத்திற்குரிய எவையேனும் பணங்களையும் நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஏதேனும் பிணையத்தில் நம்பிக்கைப் பொறுப்புப் பணங்களை முதலீடு செய்வது சட்டமுறையானதோ, அந்த ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பில் முதலீடு செய்வதற்கும் அல்லது ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் எவையேனும் அத்தகைய பணங்களை இலங்கையில் அசைவற்ற ஆதனக் கொள்வனவில் முதலீடு செய்வதற்கும் அல்லது அத்தகைய முதலீடுகளை வேறுபடுத்துவதற்கும் அல்லது உடனடியாக செலவினத்திற்குத் தேவைப்படாத அத்தகைய பணங்களின் ஏதேனும் பாகத்தை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் நிலையான வைப்பீட்டை வைப்பீடு செய்வதற்கும் ;

(ஞ) இக்கட்டளைச் சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் தோதான சாதனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு நிறுவகத் தத்துவங்களுக்கு இடைநேர்விளைவான அல்லது அதன் விளைவாந்தன்மையதான நிறுவகத்தின் வேறு எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிப்பதற்கு.

(2) ஏதேனும் கல்விசார் கருமம் தொடர்பிலான தீர்மானம் எதுவும், கல்விசார் கூட்டவைக்கு அதன் மீது அதன் அபிப்பிராயத்தை பதிவு செய்து சபைக்கு அனுப்புவதற்கான வாய்ப்பொன்று முதலில் வழங்கப்பட்டிருந்தாலன்றி சபையால் நிறைவேற்றப்படுதலாகாது.

ஆயின், அவ்வாறு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எதுவும் பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுனன்றி செயற்படுத்தப்படுதலாகாது.

இப்பந்தியில் "கல்விசார் கருமம்" என்பது கல்விசார் கூட்டவையின் கட்டுப்பாட்டிற்கும் பொதுப்பணிப்பிற்கும் அமைந்த ஏதேனும் கருமம் என்று பொருள்படும்.

13. (1) பின்வரும் ஆட்களைக் கொண்ட கல்விசார் கூட்டவையொன்றிருத்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் ; இவர் தவிசாளராதல் வேண்டும் ;

(ஆ) கற்கைத்துறை ஒவ்வொன்றினதும் தலைவர் ;

(இ) முறையே கமத்தொழில் மற்றும் நீர்ப்பாசன அமைச்சுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அத்தகைய அமைச்சுகளின் அந்தந்தச் செயலாளர்களால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு அலுவலர்கள் ;

(ஈ) கற்கைத்துறை ஒவ்வொன்றிலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் ;

(உ) பாடநெறி ஒவ்வொன்றினதும் ஒருங்கிணைப்பாளர்கள் ;

(ஊ) நிறுவகத்தின் கற்கைத்துறை ஒவ்வொன்றிலுமிருந்து சிரேஷ்டப் பேராசிரியர்கள், பேராசிரியர்கள் அத்துடன் இணைப்பேராசிரியர்கள் ; அத்துடன்

(எ) கற்பித்தலில் ஈடுபட்டுள்ளவர்களும் மேலே (ஊ) என்பதற்குட்பட்ட உறுப்பினர்கள் அல்லாதவர்களுமான நிறுவகத்தின் நிரந்தரப் பணியாட்டொகுதியினரிடையேயிருந்து தெரிவு செய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்.

(2) கல்விசார் கூட்டவை, சபையின் ஒருப்பாட்டுடன் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு ஓர் ஆளை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களைத் தேர்ந்து எடுக்கலாம் ; ஆனால் அவ்வாறு தேர்ந்து எடுக்கப்பட்ட ஆளெவரும் கல்விசார் கூட்டவையில் தேர்தலுக்கு நிற்பதற்கோ அல்லது ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்கோ உரித்துடையவராதலாகாது.

(3) கல்விசார் கூட்டவையின் கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், எவரேனும் இருப்பின் அவர்கள் புற நிங்கலாக அதன் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலொன்றுக்குக் குறையாத சிறிய எண்ணிக்கையாதல் வேண்டும்.

(4) கல்விசார் கூட்டவை அவசியமானபோது கூடுதல் வேண்டும் ; எவ்வாறாயினும் ஒவ்வோராண்டும் ஆறு தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

14. (1) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கல்விசார் கற்கைச் சபை அல்லது சபைகள் நிறுவகத்தின் போதனை, பயிற்சி, ஆராய்ச்சி அத்துடன் பரீட்சைகள் என்பன மீது கட்டுப்பாட்டையும் பொதுவான பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கல்விசார் குழுவானது, (1) ஆம் உட்பந்தியால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி :-

(அ) சபையால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயத்தைப் பரிசீலனை செய்தலும் அறிக்கையிடுதலும் ;

(ஆ) பாடநெறிகள், கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சி நிகழச்சித்திட்டங்கள், ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது பரீட்சைகள் தொடர்பானவை அல்லாத விடயங்கள் மீது சபைக்கு விதப்புரைகளும் அறிக்கைகளும் சமர்ப் பித்தலும் ;

(இ) ஏதேனும் விசேட பாடம் அல்லது பாடங்கள் பற்றி பரிசீலனை செய்து அறிக்கையிடும் நோக்கத்திற்காக கல்விசார் குழுவின் உறுப்பினர்கள் அல்லாத ஆட்களை உள்ளடக்கக்கூடிய குழுமுக்களை நியமித்தலும் ;

(ஈ) சபைக்கு-

(i) பாடநெறிகளுக்கும், பரீட்சைகளுக்கும் மாணவர்களை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளையும் ;

(ii) ஆசிரியர்களாகவும், பரீட்சகர்களாகவும் அங்கீகரிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்கஸையும் ;

(iii) விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளில் சித்தியடைந்து விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தியுள்ளவர்களும் பட்டங்களின், திப்ளோமாக்களின், சான்றிதழ்களின் அத்துடன் வேறு கல்விசார் சாதனங்களின் அளிப்புக்குத் தகுதியுடையவர்களுமான ஆட்களையும் ;

(iv) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்களுக்கும் புலமைப் பரிசில்களுக்கும் புலமைப் பொருளுதவிகளுக்கும் ஏழைக்கல்வியுதவிகளுக்கும் பதக்கங்களுக்கும் வேறு பரிசுகளுக்கும் போட்டி முறைகளையும் நிபந்தனைகளையும் ;

(v) ஆராய்ச்சிப்படிப்புப் பரிசில்களினதும், புலமைப் பரிசில்களினதும், புலமைப் பொருளுதவிகளினதும் ஏழைக்கல்வியுதவிகளினதும் பதக்கங்களினதும் வேறு பரிசுகளினதும் அளிப்புக்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களையும் ;

விதப்புரை செய்தலும் வேண்டும் ; அத்துடன்

(உ) இக்கட்டளைச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் தோதான சாதனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு நிறுவகத்தின் தத்துவங்களுக்கு இடைநேர்விளைவான அல்லது விளைவாந்தன்மையினதான கல்விசார் விடயங்கள் தொடர்பில் நிறுவகத்தின் வேறு எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தலும் வேண்டும்.

15. பின்வருவன தொடர்பில் கற்கைச் சபைகள் இருத்தல் வேண்டும் :-

(அ) ஆராய்ச்சி மற்றும் உயர்நிலைப்பட்டங்கள் ;

(ஆ) உள்துறை கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் ;

(இ) வெளிவாரி மற்றும் விசாலிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

16. ஆராய்ச்சி மற்றும் உயர்நிலைப் பட்டங்கள் தொடர்பிலான கற்கைச் சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் ; இவர் தவிசாளராதல் வேண்டும் ;

(ஆ) கற்கைத்துறை ஒவ்வொன்றினதும் தலைவர் ;

(இ) நிலையம் ஒவ்வொன்றினதும் ஒருங்கிணைப்பாளர்கள் அல்லது அவர்களது நியமத்தர்கள் ;

(ஈ) கற்கைத்துறை ஒவ்வொன்றினாலும் அத்துடன் ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும் அல்லது பட்டப்பின் கற்பித்தலில் ஈடுபட்டிருக்கும் நிலையம் ஒவ்வொன்றினாலும் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் ; அத்துடன்

(உ) இனம் காணப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் ஒவ்வொன்றையும் ஒருங்கிணைப்பதற்கு கல்விசார் கூட்டவையால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்.

17. (1) உள்துறை கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான கற்கைச்சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பணிப்பாளர் ; இவர் தவிசாளராதல் வேண்டும் ;

(ஆ) கற்கைத்துறை ஒவ்வொன்றினதும் தலைவர் ;

(இ) தற்போதைய ஊழியர் கோப்பிலுள்ள எல்லா ஆசிரியர்களும் ;

(ஈ) கமம்சார் தொழில்நுட்பவியல் தொடர்பிலான தொழில் முயற்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பகிரங்க அல்லது தனியார் துறைகளிலிருந்து சபையால் நியமிக்கப்பட்ட இரண்டு நியமத்தர்கள் ; அத்துடன்

(உ) நிறுவகத்துடன் பதிவுசெய்யப்பட்டுள்ள உள்துறை பட்டதாரி மாணவர்களிடையேயிருந்து தெரிவு செய்யப்பட்ட இரண்டு மாணவர்கள்.

(2) பந்தி (1) இன் (உ) என்னும் உட்பந்தியின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் உறுப்பினரொருவராக ஒரு கல்வியாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும். ஆயினும் அத்தகைய உறுப்பினர் உள்துறை பட்டதாரி மாணவர் ஒருவராகத் தொடர்ந்து பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பரீட்சைகளை அல்லது சார்புடைய விடயங்களைப் பற்றி உரையாடுவதற்கென கூட்டப்பட்ட கற்கைச் சபையின் ஏதேனும் சட்டத்தில் பங்குபற்றுவதினின்று புறநீக்கம் செய்யப்படுதல் வேண்டும் ; அத்தகைய கூட்டம் எதுவும் அத்தகைய புறநீக்கம் எவ்வாறிருப்பினும் முறையாக நடத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

18. வெளிவாரி மற்றும் விசாலிப்பு நிகழச்சித்திட்டம் தொடர்பிலான கற்கைச் சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் ; இவர் தவிசாளராதல் வேண்டும் ;

(ஆ) நிலையம் ஒவ்வொன்றினதும் ஒருங்கிணைப்பாளர்கள் ; அல்லது அவர்களின் நியமத்தர்கள் ;

(இ) கற்கைத்துறை ஒவ்வொன்றிலுமிருந்து நியமத்தர் ஒருவர் ; அத்துடன்

(ஈ) இனம் காணப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் ஒவ்வொன்றையும் ஒருங்கிணைப்பதற்கு கல்விசார் கூட்டவையால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்.

19. (1) கற்கைச் சபை ஒவ்வொன்றும் குறித்துரைக்கப்பட்டவொரு நோக்கத்திற்கும் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு கல்விசார் கூட்டவையுடனான ஒருப்பாட்டுடன் ஆள் ஒருவரை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களைத் தேர்ந்தெடுக்கலாம். ஆனால் அவ்வாறு கற்கைச் சபையின் ஏதேனும் கூட்டத்தில் தேர்தலுக்கு நிற்றலோ அல்லது அதில் வாக்களித்தலோ ஆகாது.

(2) கற்கைச் சபையின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எவருமிருப்பின் அவர்கள் புறநீங்கலாக அதன் மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் ஒன்றுக்குக் குறையாத எண்ணிக்கையாதல் வேண்டும்.

(3) கற்கைச் சபை அவசியமான பொழுது கூடுதல் வேண்டும். எவ்வாறாயினும் அது ஒவ்வோராண்டிலும் பத்துத் தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

20. பின்வரும் அறிவுத்துறை ஒவ்வொன்று தொடர்பிலும் கற்கைப் பகுதிகள் இருத்தல் வேண்டும் :-

(அ) கமத்தொழில் தொழில்நுட்பவியல் ;

(ஆ) உணவுத் தொழில்நுட்பவியல் ;

(இ) தொழில் முயற்சி, கமம்சார் வணிகம் மற்றும் கிராமிய விஞ்ஞானங்கள்.

21. (1) கற்கைப்பகுதி ஒவ்வொன்றும் துறைத் தலைவர் ஒருவரைக் கொண்டிருத்தல் வேண்டும். இவர் ஒரு சிரேஷ்ட பேராசிரியராக, பேராசிரியராக, இணைப் பேராசிரியராக அல்லது சிரேஷ்ட விரிவுரையாளராக இருத்தல் வேண்டும். சிரேஷ்ட பேராசிரியர், பேராசிரியர், இணைப் பேராசிரியர் அல்லது சிரேஷ்ட விரிவுரையாளர் ஒவ்வொருவரும் பணிப்பாளரின் விதப்புரையின்மீது சபையால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) துறைத் தலைவர் ஏதேனும் தோதன சாதனங்களின் ஏற்பாடுகளுக்கமைய அவரது நியமனத் தேதியிலிருந்து கணிப்பிடப்பட்ட மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி மீள் நியமனத்திற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(3) துறைத் தலைவர் ஒவ்வொருவரும் சபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஊதியத்தைப் பெறுதல் வேண்டும்.

(4) லீவு அல்லது சுகயீனம் காரணமாக அல்லது வேறு ஏதுவினால் துறைத் தலைவர் மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அவரது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்ற இயலாதவராக இருக்குமிடத்து, சபையானது அத்தகைய காலப்பகுதிக்கு அவரது இடத்தில் பதிற் கடமையாற்றுவதற்காக ஏனைய பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், அல்லது சிரேஷ்ட விரிவுரையாளர்களிடமிருந்து ஆளொருவரை நியமித்தல் வேண்டும்.

(5) துறைத் தலைவர் ஓய்வுபெறுமிடத்து அல்லது பதவி துறக்குமிடத்து அல்லது வேறு ஏதுவினால் அவரது பதவிக்குரிய கடமைகளை மூன்று மாதங்களை விஞ்சியவொரு காலப்பகுதிக்கு நிறைவேற்ற இயலாதிருக்குமிடத்து துறைத் தலைவரின் பதவி வறிதாக்கியுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் புதிய துறைத் தலைவர் ஒருவர் (1) ஆம் பந்தியின் நியதிகளின்படி நியமிக்கப்படுதல் வேண்டும்.

22. (1) பின்வருவன தொடர்பில் நிலையங்கள் இருத்தல் வேண்டும் :-

(அ) கமம்சார் வணிக மற்றும் கைத்தொழில் அலகு ;

(ஆ) விஞ்ஞான பூங்கா ; அத்துடன்

(இ) விசாலிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்.

(2) நிலையம் ஒவ்வொன்றும் நிறுவகத்தின் ஆசிரியர்களிடையேயிருந்து சபையால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பாளர் ஒருவரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

23. நிறுவகத்தின் நிதியாண்டு அரசாங்கத்தின் நிதியாண்டாதல் வேண்டும்.

24. நிறுவகம் நிதியமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். அதனுள் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நிறுவனத்திற்குச் செலுத்தப்படவேண்டிய எல்லாக் கட்டணங்களும் ;

(ஆ) பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்பட்டு நிறுவனத்திற்கான மானியங்களாக ஆணைக்குழுவால் செலவீடு செய்யப்பட்ட எல்லாப் பணங்களும் ;

(இ) நிறுவனத்தின் வெளிப்புற அல்லது விசாலிப்பு செயற்பாடுகள் ஊடாக உண்டு பண்ணப்பட்ட எல்லா வருமானமும்; அத்துடன்

(ஈ) அறக்கொடைகளிலிருந்து பெறப்பட்ட எல்லா வருமானமும் ; அத்துடன்

(உ) எத்தன்மைத்தான ஏதேனும் மூலத்திலிருந்து நிறுவனத்திற்கு செலுத்துமதியாகவுள்ள அத்தகைய ஏதேனும் பணங்கள்.

(2) மேற்குறிப்பிட்டவொரு மாதத்திற்குள் நிதியத்தினுள் செலுத்தப்பட்ட எல்லாப்பணங்களினதும் பொழிப்பொன்று, தோதான வருமானத் தலைப்பின்கீழ் வகுக்கப்பட்டு அடுத்துறும் மாதத்தின் இறுதிக்கு முன்னர் பணிப்பாளரால் ஆணைக்குழுவுக்கு அதன் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) மேற்கூறப்பட்ட பிரிவுகள் ஒவ்வொன்றிலுமிருந்து பெறப்பட்ட வருமானம் புறம்பாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

25. பின்வருவன பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும் :-

(அ) நிறுவனத்தின் கணக்குகளை ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அல்லது சபையால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் வைத்திருத்தல் ;

(ஆ) நிதியத்தினுள் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களையும் பெறுதலும் அத்தயை பணங்களைத் தகுந்த கணக்கு தலைப்பில் வரவு வைத்தலும் ;

(இ) அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளையும் செய்தல் ; அத்துடன்

(ஈ) ஆணைக்குழுவுக்கு தேவையானவாறு அடுத்துவரும் ஆண்டின் மதிப்பீடுகளையும் ஆண்டு நிதி ஒதுக்கீடுகளையும் சபைக்கு தயாரித்தல்.

ஆயின், எவ்வாறாயினும், குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக அல்லது குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களுக்கான அறக்கொடைகளிலிருந்து செய்யப்பட்ட மானியக்கொடைகளிலிருந்து பெறப்பட்ட வருமான நிறுவகத்தின் கணக்குகளில் புறம்பாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதுடன் நிறுவகத்தின் பொது நோக்கங்களுக்காக அல்லது அத்தகைய மானியக்கொடைகள் அல்லது அறக்கொடைகள் எந்த நோக்கங்களுக்காக ஆக்கப்பட்டனவோ முறையே அந்த எவையேனும் நோக்கங்கள் அல்லது குறிக்கோள்கள் அல்லாத வேறு எவையேனும் நோக்கங்களுக்காக அல்லது குறிக்கோள்களுக்காக கொடுப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது.

26. (1) நிறுவகமானது, ஆண்டுக் கணக்குக் கூற்றொண்றையும் அதன் செயற்பாடுகள் தொடர்பிலாக புள்ளிவிபரங்களையும் ஆணைக்குழு காலத்துக்குக்காலம் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அமைந்தவையும் அத்தகைய விபரங்கள் அடங்கியவையுமான புள்ளிவிவரங்களையும் தயாரித்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் கணக்குப் புத்தகங்கள் நிறுவகத்தின் அலுவலகத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

27. உயர்கல்வி நிறுவனமொன்றின் கணக்குகளின் கணக்காய்வுக்கு இயல்பானவாறு சட்டத்தின் பாகம் XIII இன் அத்தகைய ஏற்பாடுகள் நிறுவகக் கணக்காய்வுக்கும் அது தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

28. (1) நிறுவகத்தின் பணியாட்டொகுதி நிறுவனத்தின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடனும் அவசியமாயின் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் அத்தகைய அலுவலர்களையும், ஆசிரியர்களையும், மற்றும் ஊழியர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிறுவனத்தின் பணியாட்டொகுதி, பல்கலைக்கழகத்தால், அதன் சொந்த பணியாட்டொகுதியிடையேயிருந்து விடுவிப்பின்மீது எற்பாடு செய்யப்படுதல் வேண்டும் அல்லது விடயத்திற்கேற்ப ஆணைக்குழுவால் அல்லது பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்படுதல் வேண்டும். சட்டத்தின் பாகம் X இன் ஏற்பாடுகள் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கான நியமனங்களுக்கும் அவை தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பல்கலைக்கழகத்தின் அலுவலர், ஆசிரியர் அல்லது ஊழியர் ஒருவர் நிறுவகத்தின் சேவைக்கு முழுநேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து, நிறுவகம், அவருக்கு பல்கலைக்கழகத்தில் அவரது நிலையான பதவியின் சம்பளத்தையும் படிகளையும் செலுத்துதல் வேண்டும். வேறு ஏதேனும் விடயத்தில் நிறுவகம் சம்பந்தப்பட்ட அலுவலருக்கு, ஆசிரியருக்கு அல்லது வேறு ஊழியர்களுக்கு அது பல்கலைக்கழகத்துடனான கலந்தாலோசனையுடனும் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய படியைச் செலுத்தலாம்.

(4) நிறுவகத்தின் பணியாட்டொகுதி பணிப்பாளரின் பணிப்பிற்கும் ஒழுக்காற்று கட்டுப்பாட்டிற்கும் அமைந்தோராதலும் வேண்டும்.

(5) நிறுவகத்தின் பணியாட்டொகுதி பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்கும் மாணவர்களுக்கும் ஏற்புடைத்தான ஒழுக்காற்று விதிகளுக்கும் நடவடிக்கை முறைகளுக்கும் அமைந்தோராதல் வேண்டும்.

29. நிறுவகம் அதன் உள்துறை பட்டதாரி மாணவர்களுக்கு மாணவர் நலம்பேணல் சங்கமொன்றை கொண்டிருத்தல் வேண்டும். சட்டத்தின் பாகம் XIV என்பதன் ஏற்பாடுகள் நிறுவகத்தின் மாணவர் நலம் பேணல் சங்கத்திற்கும் அதன் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் எற்புடையனவாதல் வேண்டும்.

30. சட்டத்தின் பாகம் XIX என்பதன் ஏற்பாடுகள் நிறுவகத்தால் ஆக்கப்பட்ட துணைவிதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகள் என்பவற்றுக்கும் அவை தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

31. நிறுவகத்தின் செயல் தீர்மானம் அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று அல்லது வெற்றிடங்கள் இருப்பதன் காரணமாக அல்லது அத்தகைய உறுப்பினர்களின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு அல்லது எவையேனும் குறைபாடுகள் இருப்பதன் காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

32. எவரேனும் ஆள் முறையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளாரா, நியமிக்கப்பட்டுள்ளாரா பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளாரா அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரா என்பது பற்றி அல்லது எவரேனும் ஆள் ஏதேனும் அதிகாரசபையின் அல்லது நிறுவகத்தின் வேறு ஏதேனும் குழுமத்தின் உறுப்பினரொருவராக இருப்பதற்கு உரித்துடையவரா என்பது பற்றி ஏதேனும் கேள்வி எழும் பட்சத்தில் அத்தகைய கேள்வி ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும் ; அதன்மீது ஆணைக்குழுவின் முடிபே தீர்க்கமாதல் வேண்டும்.

33. ஆணைக்குழு பல்கலைக்கழகத்தின் விதப்புரையின்மீது இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடெதுவும் செய்யப்படாத எவையேனும் எதிர்பாரா நிகழ்வுகள் மீதான தீர்மானத்திற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

34. இக்கட்டளைச் சட்டம் வலுவுக்கு வரும் தேதிக்கு உடன்முன்னரான நாளன்று நிலவிய மாகம்புற- கமத்தொழில் தொழில்நுட்பவியல் மற்றும் சமுதாய நிலையத்தின் யாப்பு அது நீக்கம் செய்யப்படுவதற்கு முன்னர் அத்தகைய யாப்பின்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் நீக்கம் செய்யப்படுகின்றது.

35. இக்கட்டளைச் சட்டத்தில் :-

'சட்டம்' என்பது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் என்று பொருள்படும் ;

'தோதான சாதனம்' என்பது சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும் ;

'துணைவிதிகள்' என்பது சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட துணைவிதிகள் என்று பொருள்படும் ;

'உயர்கல்வி நிறுவகம்' என்பது எந்த நிறுவகம் தொடர்பில் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் கட்டளை ஒன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்நிறுவனம் எனப் பொருள்படும் ;

'ஆசிரியர்' என்பது சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும் ;

'பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு' என்பது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எனப் பொருள்படும் ;

'முதலை' என்பது கொழும்பு பல்கலைக்கழகத்தின் முதலை என்று பொருள்படும்.

*10-796*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.